

# 02 ஆம் அத்தியாயம்
# இலங்கையில் பாராளுமன்ற ஆட்சி முறையின் வளர்ச்சி

இலங்கையில் முடியாட்சி வீழ்ச்சியுற்று பிரித்தானிய பாராளுமன்ற முறை வளர்ச்சியுற்ற விதத்தை இவ்வத்தியாயம் மூலம் அறிந்து கொள்வோம். இதனை நன்கு விளங்கிக் கொள்வதற்காக முதலில் பிரித்தானியப் பாராளுமன்ற ஆட்சிமுறையின் முக்கிய பண்புகளைத் தெரிந்து கொள்வோம். அதன் ஆரம்பமும், வளர்ச்சியும் பற்றி தரம் 8 இல் வரலாற்றுப் பாடத்தில் கற்றது உங்களுக்கு ஞாபகத்தில் இருக்கலாம்.

- ★ பிரித்தானியரிடமிருந்து எமக்குக் கிடைக்கப்பெற்ற கொடையே பாராளுமன்ற ஆட்சிமுறையாகும். பிரித்தானியப் பாராளுமன்றம், மக்கள் பிரதிநிதிகள் சபை, பிரபுக்கள் சபை, அரசன் அல்லது அரசி என்ற மூன்று அங்கங்களைக் கொண்டதாகும்.
- ★ பாராளுமன்றப் பிரதிநிதிகள் சபை சர்வஜன வாக்குரிமை மூலம் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளால் ஆனது.
- ★ இப் பிரதிநிதித்துவ முறையானது அரசியல் கட்சி அடிப்படையில் செயற்பட்டது.

**பாராளுமன்றத்தின் கடமைகளும், பொறுப்புக்களும்**

- ❖ சட்டங்களை இயற்றுதல் அல்லது சட்டவாக்கச் செயற்பாடு
- ❖ சட்டத்தை நிறைவேற்றுதல் அல்லது நிர்வாகச் செயற்பாடு
- ❖ நிதி நிர்வாகம் என்பனவாகும்.

- ★ பிரதிநிதிகள் சபையில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி எனும் இரு பிரிவுகள் உள்ளன.
- ★ நிர்வாகக்கடமைகளை மேற்கொள்வதற்காக ஆளுங்கட்சிப் பிரதிநிதிகளி லிருந்து தெரிவு செய்யப்பட்ட அமைச்சரவை ஒன்று உள்ளது. அதனை **'கபினட்'** என்று குறிப்பிடுவர். அதற்குத் தலைமை வகிப்பவர் பிரதமராவார்.

- பிரபுக்கள் சபை அல்லது மேல் சபையில் அங்கத்துவம் பெறுபவர்கள் முடிக்குரியவரால் வழங்கப்பட்ட பிரபுத்துவப் பட்டங்களைப் பெற்றோராவார். இவர்கள் அச்சபையின் நிரந்தர அங்கத்தவராவர்.

- இச்சபை பிரித்தானியாவின் அதி உயர் மேன்முறையீட்டு நீதிமன்றமுமாகும்.

- பிரித்தானியப் பாராளுமன்ற முறை ஆட்சியில் முடிக்குரியவர் பெயரளவு நிர்வாகி மட்டுமே.

இப்பண்புகளைக் கொண்ட பாராளுமன்ற ஆட்சிமுறை இலங்கையில் வளர்ச்சியுற்ற விதத்தை, 1833இல் இருந்து 1947 வரை செயற்படுத்தப்பட்ட அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் ஊடாக இவ்வத்தியாயத்தில் கற்றுக்கொள்வோம்.

## இந்நாட்டில் பாராளுமன்ற ஆட்சிமுறை வளர்ச்சியுற்ற முக்கியமான சந்தர்ப்பங்கள் வருமாறு

| | | |
|---|---|---|
| கோல்புறூக் கமரன் சீர்திருத்தம் | - | கி.பி 1833 |
| குறூ மக்கலம் சீர்திருத்தம் | - | கி.பி 1910 |
| மனிங் சீர்திருத்தம் | - | கி.பி 1920 |
| மனிங் டெவென்ஷயர் சீர்திருத்தம் | - | கி.பி 1924 |
| டொனமூர் சீர்திருத்தம் | - | கி.பி 1931 |
| சோல்பரி சீர்திருத்தம் | - | கி.பி 1947 |

### கோல்புறூக் கமரன் சீர்திருத்தம் - கி.பி 1833

பிரித்தானியர் தமக்குப் பயனளிக்கும் குடியேற்ற நாடாக இலங்கை இருக்க வேண்டும் என்பதற்காகவே அதனை முடிக்குரிய நாடாக்கிக் கொண்டனர். ஆனால் வருடா வருடம் இலங்கையின் வருமானம் குறைந்து கொண்டு செல்ல, செலவுகள் அதிகரித்துச் சென்றன. இது தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்டதே கோல்புறூக் ஆணைக்குழுவாகும்.

அதன் தலைமைத்துவத்தை டபிள்யு.எம்.சி. வில்லியம் கோல்புறூக் ஏற்றுக் கொண்டதுடன் சார்ள்ஸ் கமரன் அவருக்கு உதவியாக இருந்தார். கி.பி 1829 இல் இலங்கைக்கு வந்த கோல்புறூக் ஆணைக்குழுவின் அறிக்கையைச் செயற்படுத்த முனைந்தார். அதேவேளை ஆளுநரின் கண்காணிப்பிற்கு உட்பட்ட பிரிவுகள் கீழே தரப்பட்டுள்ளன.


ஆளுநர் வில்மட் ஹோர்டன்

- இலங்கையின் நிர்வாகம்
- வரவும், செலவும்
- அரச பரிபாலன நிறுவனங்கள்
- நீதித்துறை

இவர்கள் தயாரித்தளித்த அறிக்கையைப் பெற்றுக் கொண்ட குடியேற்றங்களுக்குப் பொறுப்பான செயலாளர் கொட்ரிச் பிரபு, 1833இல் இதனைச் செயற்படுத்த அங்கீகரித்தார். நிர்வாகம், பொருளாதாரம், குடியியல், நிர்வாக சேவை, நீதித்துறைகளிலான இச்சீர்திருத்தங்கள் ஆளுநர் ரொபட் வில்மட் ஹோர்ட்டன் காலத்தில் செயற்படுத்தப்பட்டன.

**செயற்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள்**


- கரையோரத்தையும் கண்டியையும் ஒன்றிணைத்து ஒரே ஆட்சிக் குட்படுத்துதல்.
- நிர்வாக வசதிக்காக நாட்டை ஐந்து மாகாணங்களாகப் பிரித்தல்.
- சட்டவாக்க, நிர்வாக சபைகள் (நிரூபன) உருவாக்கப்பட்டன.
- கட்டாய சேவையாக இருந்த இராஜகாரிய முறை நீக்கப்பட்டது.
- வர்த்தக ஏகபோக உரிமை நீக்கப்பட்டது.
- காணிகளை விற்கும் கொள்கை ஆரம்பிக்கப்பட்டது.
- ஆங்கிலக் கல்வி அரச கொள்கையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- புதிய சட்டங்களும் நீதிமன்றங்களும் உருவாக்கப்பட்டன.

இச் சீர்திருத்தங்களுள் இவ்வத்தியாயத்தில் எங்களுடைய முக்கிய கவனத்தைச் செலுத்த வேண்டியது அரசியல், நிர்வாகத் துறைகளில் தாக்கத்தை விளைவிக்கும் சீர்திருத்தங்கள் பற்றியாகும்.

### நாட்டை ஒன்றுபடுத்துதல்

இதுவரை காலமும் கரையோர பிரதேசங்களும் மலைநாடும் வெவ்வேறாக ஆளப்பட்டு வந்தன. கோல்புறூக் சீர்திருத் தங்களின் கீழ் இவ்விரு பிரதேசங்களும் ஒன்றிணைக்கப்பட்டு இலங்கை வரலாற்றில் முதன்முறையாக முழு நாட்டிற்கும் பொது வான ஆட்சி முறை ஒன்று ஆரம்பிக்கப் பட்டது. இதன் மூலம் நாடு ஐந்து மாகாணங் களாகப் பிரிக்கப்பட்டது.

| மாகாணங்களும், நிர்வாக மையங்களும் | |
|---|---|
| வடக்கு | யாழ்ப்பாணம் |
| தெற்கு | காலி |
| கிழக்கு | திருகோணமலை |
| மேற்கு | கொழும்பு |
| மத்தி | கண்டி |



இலங்கை ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்படல்


- ❖ பிரதேச நடவடிக்கைகளுக்காக மாகாண அரசாங்க அதிபர்களாக ஐவர் நியமிக்கப்பட்டனர்.
- ❖ முக்கியமான இடங்களுக்கு உபஅரசாங்க அதிபர்களும் நியமிக்கப்பட்டனர்.

பாராளுமன்ற முறையின் வளர்ச்சிக்கு நாடு ஒன்றுபட்டதாயிருத்தல் அவசியமாகும். எனவே கோல்புறூக் சீர்திருத்தங்களின் கீழ் நாடு ஐக்கியப்பட்டமை பாராளுமன்ற ஆட்சிமுறையை நோக்கி வளர்ச்சி அடைவதற்கான ஆரம்ப நடவடிக்கையாக அமைந்தது.

1833 இல் கோல்புறூக் சீர்திருத்தத்தின் மிக முக்கியமான அரசியல் விளைவாக சட்டவாக்கக் கழகமும், நிர்வாகக் கழகமும் உருவாக்கப் பட்டதாகும். அரசியல் வளர்ச்சியில் நேரடியாகப் பங்களிப்புச் செய்த இவ்வாலோசனை, பாராளுமன்ற முறை ஒன்றிற்கு இடப்பட்ட மூலவித்தாகக் கருதப்படுகின்றது.

இதற்கமைய உருவாக்கப்பட்ட சட்டவாக்கக் கழகம் (சட்டசபை) 15 உறுப்பினர்களைக் கொண்டது.

**கோல்புறூக் கமரன் சீர்திருத்தம் - 1833**




சட்ட நிர்வாகக் கழகம் முழுமையாக அதிகாரிகளை மட்டும் கொண்டிருந்தது. 1833ஆம் ஆண்டில் இவ்விரு சபைகளும் ஆரம்பிக்கப்பட்டன. முதலாவது சட்டவாக்கக் கழகம் 1834ஆம் ஆண்டு மே மாதத்தில் கூடியது. மேலே குறிப்பிட்டுள்ளபடி இச்சபையின் உத்தியோகப்பற்றுள்ள அங்கத்தவர்கள் அரசாங்க உயர் அதிகாரிகளாவர். உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவர்கள் ஆளுநரால் நியமிக்கப்பட்டனர். எனவே அது இன்றைய பாராளுமன்ற அரசியலுக்கு அமைவான பிரதிநிதிகள் நிறுவனம் அல்ல.

உத்தியோகப்பற்றற்றோர் இன அடிப்படையிலேயே தெரிவு செய்யப்பட்டனர்

பிரதிநிதிகள் சபை என்பது மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டதாகும்

ஜொஹன்னஸ் கொட்பிரி பிலிப்ஸ் விஜயகோன் பண்டிதரத்ன என்பவர் சட்டசபைக்கு முதன் முதல் தெரிவு செய்யப்பட்ட சிங்களவராவர். ஆறுமுகம் பிள்ளை குமாரசுவாமி என்பவர் தமிழ் மக்கள் சார்பில் தெரிவு செய்யப்பட்டவராவார்.

இன்று இலங்கையின் அபிவிருத்திச் செயற்பாடுகளில் இனங்களுக்கிடையே கருத்து வேறுபாடு இடையிடையே தோன்றுகின்றது. இதற்கான வித்தூண்டப்பட்டது கோல்புறூக் சீர்திருத்தங்களின் கீழ் சட்டவாக்கக் கழகத்திற்கு உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர்கள் இனவாரியாகத் தெரிவு செய்யப்பட்டதேயாகும். எனினும் கோல்புறூக்கின் அரசியல் சீர்திருத்த ஆலோசனைகள் பாராளுமன்ற ஆட்சியின் பிரவேசமாக அமைந்தது. இச்சட்டவாக்கக் கழகமே பாராளுமன்ற ஆட்சிமுறை வரை வளர்ச்சியடைந்திருந்தது.

இதனால் ஆரம்பத்தில் இருந்தே உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர்கள் இங்கிலாந்து பாராளுமன்றத்தில் செயற்படும் பிரதிநிதித்துவ சபைபோல் இச்சபை அமைய வேண்டும் என்ற அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தனர்.

நாட்டின் ஏனைய துறைகள் வளர்ச்சியடைவதற்கேற்ப சட்டவாக்கக் கழகமும் காலத்திற்கு ஏற்ப வளர்ச்சி அடைய வேண்டும் என்பது கோல்புறூக்கின் ஆலோசனையாக இருந்தது.

இதற்கமைவாக உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர்களின் அதிகாரங்களை அதிகரிக்கும்படி கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

❖ 1889இல் சட்டவாக்கக் கழகத்தில் உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர்களின் தொகை ஆறிலிருந்து எட்டாக அதிகரிக்கப்பட்டது. இதற்கேற்ப மலைநாட்டுச் சிங்களவர் ஒருவரும் (திரு.பீ.பி பானபொக்கை) முஸ்லிம் ஒருவரும் (ஜனாப் எம்.சி அப்துல் ரஹுமான்) இப்பதவிக்கு நியமிக்கப்பட்டனர்.

1833இல் செயற்படுத்தப்பட்ட இனரீதியான பிரதிநிதித்துவம் விஸ்தரிக்கப்பட்டமையால், சிங்களவர்கள் மலைநாட்டுச் சிங்களவர்கள், கரையோரச் சிங்களவர்கள் என இரு வகையாகப் பிரிக்கப்பட்டனர்.

19ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலப்பகுதியில் ஐரோப்பியர்கள் அரசியல் சீர்திருத்த போராட்ட இயக்கத்திலிருந்து விலகிக் கொள்ள, மேற்கத்தைய கல்வியைப் பெற்ற மத்தியதர வர்க்க இலங்கையர்கள் போராட்டத்தில் முன்னணிக்கு வந்தமை, இந்நாட்டில் பாராளுமன்ற ஆட்சிமுறை வளர்ச்சியின் இன்னோர் விசேட அம்சமாக அமைந்தது.

இலங்கை மத்தியதர வர்க்கத்திலிருந்து உருவான சிலாபச் சங்கம், யாழ்ப்பாணச் சங்கம், கீழ்நாட்டு பெருந்தோட்டத் தொழிலாளர் சங்கம் போன்ற பல சங்கங்கள் தோன்றியதோடு, அவை அரசியல் சீர்திருத்தப் போராட்டங்களில் முக்கியத்துவம் பெறத் தொடங்கின.

இச்சங்கங்களால் தனித்தனியாகக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டாலும் அவற்றில் சட்டவாக்கப் பிரதிநிதிகள் தெரிவு செய்வது மாகாண ரீதியான பிரதேச வாரிப் பிரதிநிதித்துவ முறைப்படி அமைய வேண்டும் என்ற விடயம் அனைத்துக் கோரிக்கைகளிலும் பொதுவாகக் காணப்பட்டது.

1908ஆம் ஆண்டு டிசம்பர் 12ஆம் திகதி ஜேம்ஸ் பீரிஸ் அவர்கள் முன்வைத்த கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு போராட்டம் அமைப்பு ரீதியான வடிவம் பெற்றது

**அவர் முன்வைத்த முக்கியமான கோரிக்கைகள் வருமாறு**

- ▶ சட்டவாக்கக் கழகத்திற்கு அங்கத்தவர்களை நியமிக்கும்போது, இனரீதியான முறையை அகற்றி பிரதேசவாரிமுறையை அறிமுகப் படுத்தல்.
- ▶ இப்பிரதிநிதிகளை ஆளுநர் பெயர் குறிப்பிட்டு நியமிப்பதை நீக்கி, வரையறுக்கப்பட்ட வாக்கு மூலம் தெரிவு செய்தல்.
- ▶ சட்டவாக்கக் கழகத்தின் அதிகாரங்களை விரிவுபடுத்துதல்.
- ▶ நிர்வாகக் கழகத்திற்கு உத்தியோகப் பற்றற்றோரில் இருந்தும் அங்கத்தவர்களை நியமித்தல்.

❖ 1910ஆம் நவம்பர் 24ம் திகதி இக்கோரிக்கைகளின் பிரதிபலனாக புதிய அரசியல் யாப்பு வெளியிடப்பட்டது.


இலவச விநியோகத்திற்காக

❖ இந்த யாப்பின்படி 1912ஆம் ஆண்டு ஜனவரி 12ஆம் திகதி சட்டவாக்கக்கழகம் முதன் முறையாகக் கூடியது.

**குறூ - மக்கலம் சீர்திருத்தம்** (1910 - 1912)

சட்டசபை அங்கத்தவர்கள்
21

உத்தியோகப் பற்றுள்ளோர்
11

உத்தியோகப் பற்றற்றோர்
10

நியமனம் மூலம் **06**

| | |
|---|---|
| கரையோரச் சிங்களவர் | - 02 |
| தமிழர் | - 02 |
| கண்டிச் சிங்களவர் | - 01 |
| முஸ்லிம்கள் | - 01 |

இனரீதியாக தேர்தல் மூலம் **04**

| | |
|---|---|
| ஐரோப்பியர் | - 02 |
| பறங்கியர் | - 01 |
| கல்வி கற்ற இலங்கையர் | - 01 |

## குறூ - மக்கலம் சீர்திருத்தங்களின் முக்கிய அம்சங்கள்

- சட்டவாக்கக் கழகத்திற்கு அங்கத்தவர்களைத் தெரிவு செய்வதற்கு முதன்முறையாக வாக்குரிமை பயன்படுத்தப்பட்டது.
- கல்விப்புலமை மிக்க இலங்கையருக்கு ஒரு பிரதிநிதித்துவத்தை வழங்கல்
- இனவாரிப் பிரதிநிதித்துவம் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படல்
- உத்தியோகச் சார்புள்ளோர் தொடர்ந்தும் அதிகமாயிருத்தல்.
- இச்சந்தர்ப்பத்தில் கற்ற இலங்கைப் பிரதிநிதியைத் தெரிவு செய்வதற்கு வாக்குரிமை கிடைக்கப்பெற்றது. குறிப்பிட்டளவு கல்வியைப் பெற்றவர்களுக்கும், சொத்து உரிமை உள்ளவர்களுக்கும் மட்டுமே வாக்குரிமை கிடைத்தது. இதற்கமைய இலங்கையில் முதல் கல்விகற்றோரில் அங்கத்தவராகத் திரு. பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார்.



ஆளுநர் ஹென்றி மெக்கலம்

பொதுமக்களுக்குப் பொறுப்புச் சொல்லும் அரசியல் திட்டம் ஒன்று கிடைக்கப்பெறாவிட்டாலும், வரையறுக்கப்பட்ட அளவிலான வாக்கு ரிமையைப் பிரயோகித்து அங்கத்தவர்களைத் தெரிவு செய்யும் சந்தர்ப்பம் கிட்டியது. இது பாராளுமன்ற ஆட்சிமுறை ஒன்றில் இருக்க வேண்டிய பிரதிநிதித்துவ முறைக்குச் சட்டவாக்கக் கழகத்தினூடாக முன்னெடுக்கப்பட்ட முதல் முயற்சி எனும் வகையில் முக்கியமானது.

### மனிங் அரசியல் சீர்திருத்தம் ~ 1920

குறூ மக்கலம் சீர்திருத்தத்தின்படி இலங்கையர்கள் எதிர்பார்த்த ஆட்சிமுறை ஒன்று கிட்டாமையால், படித்த இலங்கையர்கள் தொடர்ந்தும் தமது கோரிக்கைகளை முன்வைத்துப் போராட்டங்களை முன்னெடுத்தனர். இதன் பொருட்டு 1919இல் இலங்கைத் தேசிய காங்கிரஸ் உருவாக்கப்பட்டது.

போராட்டக்காரர்களின் கோரிக்கைகளுக்குப் பிரதிபலிப்பாக 1920இல் புதிய அரசியல் சீர்திருத்தம் ஒன்று வழங்கப்பட்டது. பொறுப்புடன் கூடிய ஆட்சி முறைக்குப் பதிலாக, ஆளுநர் வில்லியம் ஹென்றி மனிங் அவர்களால் வழங்கப்பட்ட சீர்திருத்தங்கள் இந்நாட்டுத் தலைவர்களுக்குச் சிறிதளவேனும் திருப்தி தரவில்லை.

இந்நிலையில் இந்த யாப்புச் சீர்திருத்தத்தைப் புறக்கணிப்பதற்கு இலங்கையர்கள் தீர்மானித்தனர். இதனைக் கவனியாது விட்டால், இலங்கைத் தலைவர்கள் பிரித்தானிய எதிர்ப்பு நடவடிக்கைகளை நோக்கித் தள்ளப்படுவார்கள் என்று மனிங் ஆளுநர் விளங்கிக் கொண்டார். ஆகையால் விரைவில் இன்னுமொரு சீர்திருத்தத்தை முன்வைக்கும்படி தேசியத் தலைவர்களை அவர் வேண்டினார். ஆளுநரின் இவ்வேண்டுகோளை ஏற்று மனிங்கின் சீர்திருத்தத்தை தற்காலிகமாக செயற்படுத்துவதற்கு தேசிய சங்கம் (இலங்கை தேசிய காங்கிரஸ்) தீர்மானித்தது.

## மனிங் சீர்திருத்தத்திற்கு அமைய சட்டசபை
(1920)

- சட்டசபை அங்கத்தவர்கள் தொகை 37
  - உத்தியோகப் பற்றுள்ளோர் 14
  - உத்தியோகப் பற்றற்றோர் 23
    - இனவாரிப் பிரதிநிதித்துவம் 03
      - ஐரோப்பியர் 02
      - பறங்கியர் 01
    - தேர்தல் மூலம் 11
      - மேல் மாகாணம் - 02
      - கொழும்பு நகர் - 01
      - ஏனைய மாகாணங்கள் - 08
    - தொழில் சார் 02
      - வர்த்தக சமூகம் - 01
      - கரையோர உற்பத்தியாளர் சங்கம் - 01
    - நியமனத்தின் மூலம் 07
      - மலைநாட்டவர் - 02
      - முஸ்லிம்கள் - 01
      - இந்தியர்கள் - 01
      - ஆளுநரின் விருப்புக்கேற்ப - 03

### செயற்பாடு

வகுப்பறையில் மாணவர்கள் தேசிய சங்கத்தைப் போல் கூடி ஆளுநர் மனிங்கின் அரசியலமைப்பு பற்றிக் கலந்துரையாடுங்கள்.

### மனிங் யாப்பின் முக்கிய அம்சங்கள்

- உத்தியோகப் பற்றுள்ளோரை விட உத்தியோகப் பற்றற்றோரர் தொகை அதிகரிக்கப்பட்டமை
- பிரதேசவாரிப் பிரதிநிதித்துவத்தை அறிமுகப் படுத்தியமை
- மாகாண ரீதியான தெரிவு முறை இடம்பெற்றமை
- சட்டவாக்கக் கழகத்தின் அதிகாரங்கள் விரிவாக்கப்பட்டமை
- வாக்குரிமை சிறு அளவில் அதிகரிக்கப்பட்டமை
- இனரீதியான பிரதிநிதித்துவம் தொடர்ந்து அமுல்படுத்தப்பட்டமை.


மனிங் தேசாதிபதி

பாராளுமன்ற ஆட்சிமுறையை நோக்கி வளர்ச்சியடைவதற்கான பண்புகள் பலவும் 1920ஆம் ஆண்டு சீர்திருத்தங்கள் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்டன. அவையாவன

- மாகாண ரீதியான தேர்தல் தொகுதி முறை அறிமுகப்படுத்தப்பட்டமை.
- ஆங்கிலம் கற்ற மத்தியதர வர்க்கத்தினருக்கு மேலதிகமாக இன்னும் குறிப்பிட்டளவினருக்கு வாக்குரிமை கிடைக்கப்பெற்றமை.
- முதன் முறையாக சட்டவாக்கக்கழகத்தில் உத்தியோகச் சார் புள்ளோரை விட உத்தியோகச் சார்பற்றோரின் தொகை அதிகரித்துக் காணப்பட்டமை.
- சட்டவாக்கக்ககழகத்தின் அதிகாரங்கள் சிறிதளவு விரிவாக்கப்பட்டமை.

### மனிங் - டெவன்ஷயர் அரசியல் சீர்திருத்தம் - 1924

இதுவரை ஒற்றுமையாக அரசியல் போராட்டங்களை முன்னெடுத்த தமிழ் - சிங்களத் தலைவர்களிடையே 1920ஆம் ஆண்டு சீர்திருத்தங்களின் பின்னர் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன.

1912இல் தெரிவான சட்டவாக்கக்கழகத்தில் 3:3 என்றிருந்த தமிழ் - சிங்கள பிரதிநிதித்துவம் 1920ஆம் ஆண்டுத் தேர்தலில் சிங்களவர்களுக்கு 14 ஆசனங்களும், தமிழர்களுக்கு 4 ஆசனங்கள் மட்டுமே கிடைத்த இந்நிலை காரணமாக சிங்கள, தமிழ் தலைவர்களிடையே ஏற்பட்ட கருத்து வேற்றுமையைத் தொடர்ந்து இருசாராரும் தமது அரசியல் கோரிக்கைகளைத் தனித்தனியாக முன்வைத்தனர்.

சிங்களத் தலைவர்களுடன் ஏற்பட்ட கருத்து வேற்றுமையால் பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள் தேசிய சங்கத்திலிருந்து விலகி கொண்டார். பின்னர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் உட்பட ஏனைய தலைவர்களும் சேர்ந்து 1921 ஆகஸ்ட் 15ம் திகதி இலங்கைத் தமிழர் மகாசபையை ஆரம்பித்தனர்.

**ஆளுநர் மனிங்கின் பதிலுரைப்பு**

❖ இலங்கையரின் இந்த வேண்டுகோள்களையும், புதிய அரசியல் சீர்திருத்தத்தின் பொருட்டுத் தமது ஆலோசனைகளையும் குடியேற்றச் செயலாளர் டெவன்ஷயருக்கு சமர்பிக்க ஆளுனர் செயற்படுத்தினார்.

**இலங்கைத் தேசிய சங்கத்தின் வேண்டுகோள்**

- சட்டவாக்கக் கழகத்தின் அங்கத்தவர் தொகையை 45 வரை உயர்த்த வேண்டும்.
- மாகாண தேர்தல் அடிப்படையில் 28 பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட வேண்டும்.
- சிறுபான்மையினர் சார்பாக 11 பேர் நியமிக்கப்பட வேண்டும்.
- தேர்தல் அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும்.

**இலங்கைத் தமிழர் மகாசபையின் வேண்டுகோள்**

- சட்டவாக்கக்கழக அங்கத்தவர் தொகையை 45 வரை உயர்த்த வேண்டும்.
- மாகாண தேர்தல் அடிப்படையில் 9 பேர் நியமிக்கப்பட வேண்டும்.
- சிறுபான்மையினர் சார்பாக 11 பேர் நியமிக்கப்பட வேண்டும்.

★ இதன் பிரதிபலிப்பாக 1924லிருந்து மனிங் - டெவன்ஷயர் அரசியல் திட்டம் செயற்படுத்தப்பட்டது.

**மனிங் - டெவன்ஷயர் அரசியல் திட்டத்தின் சிறப்பம்சங்கள்**

❖ சட்டவாக்கக்கழகத்தின் அங்கத்தவர்களுள் பெரும்பான்மையானோர் வரையறுக்கப்பட்ட வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டோராவார்.

❖ வாக்குரிமையானது 1920ஆம் ஆண்டு சீர்திருத்தத்தில் இருந்தபடியே காணப்பட்டது.

❖ சட்டவாக்கக் கழகத்தின் உபதலைவராக அங்கத்தவர்களுள் ஒருவரை வாக்குரிமையின் மூலம் தெரிவு செய்து கொள்ளச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

❖ சட்டவாக்கக் கழகத்தின் தலைமைப்பதவி ஆளுநரையே சாரும்.


❖ இனவாரி பிரதிநிதித்துவம் தொடர்ந்து இருந்து வரும்.

❖ மேல்மாகாணத்தில் தமிழருக்கென்று புதிய அங்கத்துவம் ஒன்று வழங்கப்பட்டது.

❖ நிர்வாகக் கழகத்திற்கு உத்தியோகச் சார்பற்ற அங்கத்தவர்கள் மூவரை நியமிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது.

மனிங் - டெவன்ஷயர் அரசியல் திட்டத்தின் கீழ் ஆளுநராகச் செயற்பட்ட ஹியூகிளிபர்ட் (1925 - 1927) இவ்வாட்சி முறையை வெற்றிகரமாகச் செயற்படுத்த முடியாது என்றும் அவசரமாக இது சீர்திருத்தப்பட வேண்டும் என்றும் குடியேற்ற நாட்டுச் செயலாளருக்கு அறிவித்தார்.

## மனிங் - டெவன்ஷயர் சீர்திருத்தம் - 1924




சட்டவாக்கக்கழக அங்கத்தவர்களுள் பெரும்பான்மையானோர் மாகாணத் தேர்தல் தொகுதி வாரியாகத் தெரிவு செய்யப்பட்டமை பாராளுமன்ற ஆட்சி முறையை நோக்கிச் சென்ற பயணத்தின் முக்கியமானதொரு திருப்பு முனையாகும்.

இலங்கையில் யாப்புச் சீர்திருத்தத்தைக் கோரிய எந்தவொரு பிரிவினரும் மனிங் - டெவன்ஷயர் சீர்திருத்தத்தால் திருப்திப்படவில்லை.

1924 இல் மனிங் - டெவன்ஷயர் சீர்திருத்தம் செயற்படத் தொடங்கியது. முதல் அதனைக் கண்டித்த தேசிய இயக்கங்களின் தலைவர்கள் புதிய அரசியல் யாப்புச் சீர்திருத்தம் தொடர்பாகக் கோரிக்கைகளை முன்வைத்தனர். அவற்றை நியாயப்படுத்துவதற்காக பத்திரிகைகள், பொதுக்கூட்டங்கள் வாயிலாக போராட்டங்களை முன்னெடுத்தனர்.

## டொனமூர் அரசியல் யாப்பு - 1931

மனிங் - டெவன்ஷயர் அரசியல் சீர்திருத்தம் மீளாய்வு செய்யப்பட வேண்டும் எனக் கோரப்பட்டதற்கு அமைய இதனை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும் பொருட்டு 1927இல் குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

ஆளுநர் ஹர்பட் ஸ்டான்லி (1927 - 1931) இன் ஆட்சிக் காலத்தில் இலங்கைக்கு வந்த குழுவிற்குத் தலைமை தாங்கியவர் டொனமூர் பிரபு ஆவார். இதனால் இது ''டொனமூர் ஆணைக்குழு'' என அழைக்கப்பட்டது.

டொனமூர் ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள்

| | | |
|---|---|---|
| தலைவர் | - | டொனமூர் பிரபு |
| அங்கத்தவர்கள் | - | சேர்.மெதிவ் நேதன் |
| | | சேர்.ஜெப்ரி பட்லர் |
| | | பேராசிரியர் டிரமன்ட் ஷீல்ஸ் |

### டொனமூர் ஆணைக்குழுவிற்கு முன்வைத்த கோரிக்கைகள்

- இலங்கைத் தேசிய சங்கத்தைச் சேர்ந்த பீரிஸ் அவர்கள் உட்பட முக்கிய குழுவினர், இலங்கைப் பிரித்தானிய ஆட்சியின் கீழ் பொறுப் புடைய ஆட்சி முறையைக் கோரினர்.
- ஏ.ஈ. குணசிங்கவின் தலைமையிலான புரட்சிவாதிகள் இலங்கைக்கு சுய ஆட்சிமுறை ஒன்றைக் கோரினர்.
- பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் தலைமையிலான தமிழ்க் குழுவினர், சட்டவாக்கக் கழகத்தில் ஓர் இனக் குழுவினரை இன்னோர் இனக்குழுவினர் மிகைத்துச் செல்லாத முறையிலான பிரதிநிதித் துவத்தைக் கோரி நின்றனர்.
- ஏ.எப். மொலமுரே, ரி.பி. கொப்பேகடுவ, ஜி.பி.ரத்நாயக்க ஆகியோர் அடங்கிய மலைநாட்டு தேசிய சபை, சுயேட்சை அதிகாரமுடைய சமஷ்டி ஆட்சி முறையொன்று மலைநாட்டுக்கு வேண்டுமெனக் கேட்டுக் கொண்டனர்.

தேசியத் தலைவர்களின் கோரிக்கைகளின்படியும் ஆளுநரின் விதந் துரைப்பின் பேரிலும் இலங்கைக்குப் பொருத்தமான ஆட்சி முறையைத் தீர் மானிப்பதற்காக ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது.

**டொனமூர் ஆணைக்குழுவின் சிபாரிசுகள்**

- அரசுக் கழகத்தை உருவாக்குதல்.
- சர்வஜன வாக்குரிமையை வழங்குதல்.
- பிரதேசவாரி பிரதிநிதித்துவம் அறிமுகம் செய்யப்பட்டமை.
- நிர்வாகக் குழு ஆட்சியை ஏற்படுத்துதல்.
- அரசுக் கழகத்தில் உத்தியோகத்தர்கள் மூவரை உள்வாங்குதல்.
- ஆளுநரின் அதிகாரங்களை மறுசீரமைத்தல்.

இலங்கை அரசியல் யாப்பு வளர்ச்சியில் மிகவும் முக்கியமான இவ் வாலோசனைகள் அனைத்தும் 1931லிருந்து செயற்படுத்தப்பட்டன.


### அரசுக் கழகம்

1833இல் கோல்புறூக் கமரன் சீர்திருத்தத்தில் செயற்பட்டதுபோல் சட்டம், சட்டவாக்கக் கழகங்களுக் கிடையே பகிர்ந்தளிக்கப்பட்ட கடமைகள், அதிகாரங்கள் என்பன ஒப்படைக்கப்பட்டன.


கிரகம் தொம்சன்

முதலாவது அரசுக் கழகத்திற்குப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக 1931 ஜூன் 10ஆந் திகதி ஆளுநர் கிரகம் தொம்சன் அவர்களால் தேர்தல் நடாத்தப்பட்டது.

**அரசுக் கழகம் - 1931**



அரசுக் கழக அங்கத்தவர்களின் வாக்களிப்பின் மூலம் தெரிவு செய்யப்படும் அவைத் தலைவர் பதவிக்கு முதன் முறையாக ஏ. எப். மொலமுரே அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சட்டநிர்வாக அதிகாரங்கள் மக்கள் பிரதிநிதிகள் பெரும்பான் மையோரினால் உருவாக்கப்பட்ட தாபனம் ஒன்றிடம் கையளிக்கப்படுவது பாராளுமன்ற ஆட்சிமுறை ஒன்றில் காணப்பட வேண்டிய விசேட பண் பாகும். இலங்கையின் அரசியல் திட்டத்தில் அப்பண்பை உருவாக்கிய டொனமூர் யாப்புச் சீர்திருத்தமொன்று இந்நாட்டு பாராளுமன்ற ஆட்சி முறையில் விசேடமான முன்னேற்றத்தை உருவாக்கிய சந்தர்ப்பமாகக் குறிப்பிடலாம்.

**செயற்பாடு**



அரசுக்கழக அமைப்பு, அதிகாரம், செயற்பாடு என்பவற்றை உள்ளடக்கி சுவர்ப்பத்திரிகைக்கு ஆக்கம் ஒன்று எழுதுங்கள்.

***சர்வசன வாக்குரிமை***

- ❖ தேர்தல் முறை அறிமுகம் செய்யப்பட்ட 1910 முதல் இலங்கையில் செயற் படுத்தப்பட்ட வாக்குரிமை வரையறைக்குட்பட்டதாகும்.
- ❖ வரையறுக்கப்பட்ட வாக்குரிமை 1910 குறு - மக்கலம் சீர்திருத்தத்தால் வழங்கப்பட்டிருந்தது.
- ❖ இதற்கமைய கல்வியறிவு, ஆண் பெண் வேறுபாடு, சொத்து, வருமானம் என்பவற்றின் அடிப்படையில் வாக்குரிமை வரையறுக்கப்பட்டிருந்தது. அதனால் வாக்குரிமை ஒரு சிறு தொகையினருக்கு 4% மட்டுமே கிடைத்தது.

இலங்கைத் தேசிய சங்கம், மலைநாட்டு தேசிய சபை, இலங்கைத் தமிழர் சங்கம், முஸ்லிம் அமைப்புகள் உட்பட சகல அமைப்புகளும் சர்வஜன வாக்குரிமை வழங்குவதை எதிர்த்தன.

புரட்சித் தலைவரான ஏ.ஈ.குணசிங்க அவர்கள் சர்வஜன வாக்குரிமை வழங்குவதற்கு ஆதரவாகக் கருத்துக்களை முன்வைத்தார்.

டொனமூர் சீர்திருத்தின் கீழ் இலங்கையில் வாழும் 21 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாருக்கும் வாக்குரிமை வழங்குவதற்கு விதந்துரைக் கப்பட்டது.

பிரித்தானியாவில் கூட சர்வஜன வாக்குரிமை 1928ஆம் ஆண்டிலேயே அறிமுகப்படுத்தப்பட்டது. அவ்வாறான சூழ்நிலையில் 1931ஆம் ஆண்டு இலங் கையருக்கு சர்வஜன வாக்குரிமை கிடைக்கப்பெற்றமை பாராளுமன்ற ஆட்சிமுறை வளர்ச்சியில் அதிமுக்கியமான அம்சமாகும்.

மக்கள் தமது பிரதிநிதிகளை அரசுக் கழகத்திற்குத் தெரிவு செய்வதற்கு சர்வஜன வாக்குரிமை வாய்ப்பளித்தது இது இந்நாட்டின் பாராளுமன்ற வளர்ச்சியில் முக்கிய கட்டமாகும்.



**செயற்பாடு**

வாக்களிப்பு மூலம் வகுப்பில் இலக்கிய மன்றத்திற்கு அங்கத்தவர்களைத் தெரிவு செய்யுங்கள்.

### நிர்வாகக்குழு முறைமை

- ❖ பிரித்தானியக் குடியேற்றங்களில் நிர்வாகக்குழு ஆட்சி முறைமை முதலில் செயற்படுத்தப்பட்டது இலங்கையிலாகும்.
- ❖ சட்டவாக்கத் துறையில் பெரும்பான்மையினரான உத்தியோக சார்பற்றோர் பொறுப்பின்றிச் செயற்படுவதற்குப் பதிலாக அவர்களை அரச நிர்வாகத்தில் நேரடியாகத் தொடர்புபடுத்திக் கொள்வதற்கு இம்முறை பொருத்தமாயி ருந்தது.
- ❖ இலங்கை அரசியல்வாதிகளுக்கு எதிர்காலத்தில் பொறுப்புடன் கூடிய ஆட்சி ஒன்றை நடத்திச் செல்வதற்குத் தேவையான பயிற்சியைப் பெற்றுக் கொள்வதற்கு நிர்வாகக் குழு முறைமையின் மூலம் சந்தர்ப்பம் கிடைத்தது.
- ❖ 61 அங்கத்தவர்களில் அதிகாரிகள் மூவரையும் தவிர்த்து ஏனைய 58 அங்கத்தவர்களும் நிர்வாகக் குழுக்களில் இடம்பெற்றனர்.
- ❖ ஏழு நிர்வாகக் குழுக்கள் உருவாக்கப்பட்டன. ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வொரு தலைவர் அங்கத்தவர்களிடையே இருந்து வாக்கின் மூலம் தெரிவு செய்யப்பட்டார். அவர் அத்துறைக்கான அமைச்சர்போலக் கருதப்பட்டார். அவ்வாறு நியமனம் பெற்ற ஏழு தலைவர்களும் அரச உத்தியோகத்தர்கள் மூவரும் சேர்ந்து பத்துப்பேரைக் கொண்ட அமைச்சரவை ஒன்றை உருவாக்கினர்.

**முதலாவது நிர்வாகக் குழுக்களும் அவற்றின் தலைவர்களும் வருமாறு:**

| | **நிர்வாகக் குழு** | **தலைவர்** |
|---|---|---|
| 1 | உள்நாட்டு அலுவல்கள் | டி.பி ஜயதிலக்க அவர்கள் |
| 2 | காணி விவசாயம் | டி.எஸ்.சேனாநாயக்க அவர்கள் |
| 3 | உள்ளூராட்சி | சீ.பட்டுவன் துடாவ அவர்கள் |
| 4 | சுகாதாரம் | டி.பி.பானபொக்கை அவர்கள் |
| 5 | தொழில், கைத்தொழில், வர்த்தகம் | பி.சுந்தரம் அவர்கள் |
| 6 | கல்வி | சீ.டபிள்யு.டபிள்யு. கன்னங்கரா அவர்கள் |
| 7 | போக்குவரத்து, பொது வேலைகள் | எம்.என்.மாக்கன் மாக்கர் அவர்கள் |

டொனமூர் அரசியல் திட்டத்தின் கீழ் தேசியப் பிரதிநிதிகளுக்கு நிர்வாகத் துறையில் பெரும்பான்மைப் பலமும், பொறுப்பும் வழங்கப்பட்டிருந்தது. நிர்வாகக் குழு முறையின் ஊடாக பொறுப்பை ஆற்றுவதில் வழங்கப்பட்ட பயிற்சியும் அனுபவமும் பாராளுமன்ற ஆட்சி முறையை நோக்கிய பயணத்தில் நெடுந் தொலைவைக் கடந்தது போல் இருந்தது.

## ஆளுநரின் அதிகாரங்கள்

- அதுவரை இருந்து வந்த ஆட்சி முறைகளுள் ஆளுநருக்கு மிக அதிகளவான அதிகாரங்கள் காணப்பட்டன. டொனமூர் அவ்வதிகாரங்களுள் கணிசமானவற்றைக் குறைத்திருந்தார்.
- அரசுக் கழகத்தின் தீர்மானம் ஒன்று சட்டமாவதற்கு ஆளுநரின் அனுமதி கிடைக்கப்பெற வேண்டும்.
- பிரித்தானியப் பேரரசு சம்பந்தப்பட்ட விடயங்களில் தீர்மானங்களை மேற்கொள்ளும் அதிகாரம் ஆளுநரிடம் இருந்தது.
- அரசுக்கழகத்தின் அனுமதியுடனோ, அனுமதியின்றியோ முக்கியமானது எனத் தாம் கருதும் விடயங்களில் சட்டங்களைப் பிறப்பிக்கும் அதிகாரம் ஆளுநரிடம் இருந்தது.

- ❖ அரசாங்க சேவைக்கு உத்தியோகத்தர்களை நியமிக்கும் அதிகாரமும் அவரிடம் இருந்தது.

சர்வஜன வாக்குரிமையைப் பெற்றுக் கொடுத்து, இனவாரிப் பிரதிநிதித் துவத்தை இல்லாமற் செய்து, பொதுமக்களின் பிரதிநிதித்துவத்திலான அரசுக் கழகத்தின் அதிகாரங்களை விரிவுபடுத்தியதன் மூலம் டொனமூர் அரசியல் திட்டம் இந்நாட்டுப் பிரதிநிதித்துவ ஆட்சி முறைமையை நிறைவுசெய்ததெனலாம்.

### சோல்பரி அரசியல் யாப்புச் சீர்திருத்தம் ~ 1947

டொனமூர் அரசியல் யாப்பு செயற்பட்டுக் கொண்டிருக்கும்போதே மீளவும் சீர்திருத்தக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. இலங்கைத் தேசிய சங்கம் போன்றே இலங்கைத் தமிழர் சங்கமும் கோரிக்கைகளை முன்வைத்ததோடு டொனமூர் அரசியல் திட்டத்திற்கு எதிராகக் குறைபாடுகள் பலவற்றையும் அவர்கள் முன்வைத்தனர்.

1932 இல் இலங்கைத் தேசிய சங்கத் தலைவர் ஈ.டபிள்யு. பெரேரா அவர்கள் புதிய சீர்திருத்தக் கோரிக்கைகளை முன்வைத்தார். அவற்றுள் முக்கியமான சில விடயங்கள் வருமாறு

- ❖ அரச உத்தியோகத்தர்கள் மூவரையும் அரசுக் கழகத்திலிருந்து நீக்கிவிட்டு அவர்களுடைய பதவிகளை அமைச்சர்களுக்கு ஒப்படைத்தல்.
- ❖ அமைச்சரவை அதிகாரங்களை விரிவாக்குதல்
- ❖ நிர்வாகக்குழு முறைக்குப் பதிலாக அமைச்சரவை முறையொன்றை ஆரம்பித்தல்.
- ❖ அரசுக் கழகத்திற்கு நிதியை நிர்வகிக்கும் அதிகாரத்தை வழங்கல்

இவ்வேளையில் தனியாக ஆலோசனைகளை முன்வைத்த தமிழ்த் தலைவர்கள், சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் சம அளவிலான பிரதிநிதித் துவம் வழங்கப்பட வேண்டும் என்றும் இனவாரிப் பிரதிநிதித்துவத்தை மீளவும் ஏற்படுத்த வேண்டும் என்றும் கோரினர். என்றாலும் மந்திரிசபை ஆட்சி முறையை நோக்கிச் செல்ல வேண்டும் என்ற கோரிக்கையை அவர்களும் ஏற்றிருந்தனர்.

இதற்கமைய தேசியத் தலைவர்கள் அனைவரும் நிர்வாக முறையிலிருந்து விலகி, பாராளுமன்ற அமைச்சரவை ஆட்சி முறையை ஏற்படுத்த வேண்டும் என்பதில் ஒன்றுபட்டு இருந்தனர்.

எப்படியிருந்த போதிலும் 1939ஆம் ஆண்டில் இரண்டாம் உலக மகாயுத்தம் ஆரம்பமானமையால் அரசியல் திட்ட சீர்திருத்தத்தின் மீது கவனம் செலுத்த முடியவில்லை.

1941இல் நடைபெறவிருந்த அரசுக் கழகத்திற்கான தேர்தலையும், நடத்த முடியாமல் போகவே 1936இல் தெரிவு செய்யப்பட்டிருந்த அரசுக்கழகமே 1947 வரை செயற்பட வேண்டியிருந்தது.

உலக மகாயுத்தம் உக்கிரம் அடைந்த வேளையில் இலங்கைத் தலைவர்களை சமாதானத்துடனும், பிரித்தானியாவுக்குச் சார்பானவர்களாகவும் வைத்துக் கொள்ளும் தேவை ஆங்கிலேயருக்கு இருந்தது. அதற்கமைய 1943இல் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் யுத்தம் முற்றுப் பெற்றவுடன் இலங்கைக்கு அரசியல் சீர்திருத்தம் ஒன்றை வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இது தொடர்பாக ஆலோசனைகளைச் சமர்ப்பிக்கும்படி அமைச்சரவைக்கு அறிவிக்கப்பட்டது.

அரசியல் யாப்புத் தொடர்பாக நிபுணத்துவம் பெற்றிருந்த அக்கால பல்கலைக்கழக உபவேந்தரான ஐவர் ஜென்னிங்ஸ் அவர்களைக் கொண்டு அமைச்சரவையின் தீர்மானங்களுக்கு இயைபான அரசியல் யாப்புச் சட்ட மூலம் ஒன்றை உருவாக்குவதற்கான பொறுப்பை பிரதமர் டீ. எஸ். சேனாநாயக்க அவர்கள் ஏற்றுக்கொண்டார்.

அரசியல் திட்ட சீர்திருத்தம் ஒன்று தொடர்பாகப் பரிசீலனை செய்வதற்கு 2ம் உலகயுத்தம் முடிவடையும் நிலையில் 1944 இல் சோல்பரிப் பிரபுவின் தலைமையில் ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. இதன் அங்கத்தவர்கள் வருமாறு:


- திருஏ.எப்.ரீஸ் அவர்கள்
- திரு.எப்.ஜே.பரோஸ் அவர்கள்

### சோல்பரி அரசியல் திட்டத்தின் முக்கிய ஆலோசனைகள்

- ❖ செனட் சபையாகிய மேல்சபை ஒன்றுடனும் பிரதிநிதித்துவ சபை ஒன்றுடனும் கூடிய பிரித்தானிய முடியின் கீழான பாராளுமன்றம் ஒன்று அமைக்கப்படல்.
- ❖ ஆளுநர் நாயகம் (மகாதேசாதிபதி) தொடர்ந்தும் முடியின் பிரதிநிதியாகச் செயற்படல்.
- ❖ பிரதமரின் தலைமையிலான அமைச்சரவை ஒன்றை அமைத்தல்.
- ❖ பிரதிநிதிகள் சபையில் பெரும்பான்மையோரின் ஆதரவைப் பெற்ற பிரதிநிதியைப் பிரதமராக நியமித்தல்.
- ❖ மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட அரசாங்க சேவை ஆணைக்குழு ஒன்றை அமைத்தல்
- ❖ பிரதம நீதியரசரின் தலைமையிலான நீதிச் சேவை ஆணைக்குழு ஒன்றை உருவாக்குதல்.
- ❖ வெளிநாட்டு விவகாரமும் பாதுகாப்பும் தொடர்ந்து பிரித்தானிய அரசின் பொறுப்பிலேயே இருத்தல்.
- ❖ சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டிருத்தல்.

### ஆளுநர் நாயகம் (மகாதேசாதிபதி)

- ❖ சோல்பரி அரசியல் திட்டத்தின்படி இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்துக் கிட்டியது. என்றாலும் பாராளுமன்றத்தின் அதிகாரங்களைக் கட்டுப்படுத் தும் வல்லமை ஆளுநர் நாயகத்துக்கு இருந்தது.
- ❖ பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்படும் ஒரு தீர்மானம் சட்டமாவதற்கு பிரித்தானிய முடியின் அங்கீகாரம் அவசியமானதாகும். அவ் அங்கீகாரத்தை முடியின் பிரதிநிதியான ஆளுநர் நாயகம் வழங்குவார்.




சோல்பரிப் பிரபு

- ❖ பாதுகாப்பு, வெளிவிவகாரம், நாணயம் வெளியிடுதல், உயர் பதவிகளுக்கான நியமனம், சிறுபான்மையினர் சம்பந்தப்பட்ட விடயங்களில் அரசியல் திட்டத்தைத் திருத்துதல் ஆகிய விடயங்கள் தொடர்பான தீர்மானங்களுக்கு அனுமதி வழங்காது இடைநிறுத்தி வைப்பதற்கான அதிகாரம் ஆளுநர் நாயகத்திடம் இருந்தது.

**பாராளுமன்றம்**

- ❖ நாட்டில் சமாதானத்தை நிலைநிறுத்துவதற்கும் நல்லதொரு நிர்வாகத்திற்கும் என பாராளுமன்றம் அமைத்துக் கொள்ளப்பட்டது.
- ❖ பிரதிநிதிகள் சபையில் 101 அங்கத்தினர்கள் இடம்பெறுவர். அவர்களுடைய பதவிக்காலம் 5 வருடங்களாகும்.
- ❖ பிரதிநிதிகள் சபை, மூதவை என இரு சபைகளைக் கொண்டிருக்கும்.
- ❖ மூதவையில் 30 அங்கத்தவர்கள் இடம்பெறுவர். இது செனட் சபை அல்லது மேல் சபை எனக் குறிப்பிடப்படும்.



- ❖ மேல் சபை உருவாக்கப்பட்டதால் எதிர்பார்க்கப்படும் முக்கியமான நான்கு நோக்கங்கள் வருமாறு:
    1. சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாத்தல்.
    2. பிரதிநிதிகள் சபையால் தூர நோக்கற்ற முறையில் அவசரமாகச் சட்டங்களை இயற்றுவதைத் தடுத்தல்.
    3. நாட்டின் உன்னதமான அறிவாளிகளின் சேவைகளைச் சட்டவாக்கத் துறைக்குப் பெற்றுக் கொள்ளுதல்
    4. புத்திசாலித்தனமான விவாதங்கள் இடம்பெறுதல்.

### சோல்பரி அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் தோற்றுவிக்கப்பட்ட பாராளு மன்றத்தின் சட்டவாக்க அதிகாரங்கள்

- ❖ 1833லிருந்து செயற்பட்டு வந்த சட்டவாக்க சபைகளுடன் ஒப்பிடுகையில் இதன் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டன. என்றாலும் இன்னும் சில வரையறைகள் காணப்பட்டன. அவையாவன:
    - ➤ ஆளுநர் நாயகத்தின் அதிகாரங்கள்
    - ➤ அரசியல் யாப்பின் 29 ஆவது உபவிதி (சிறுபான்மையினரின் பாதுகாப்புத் தொடர்பானது) போன்ற சில விதிகள்.
- ❖ மேலே குறிப்பிட்ட எல்லைகளுக்கு உட்பட்டதாக வெளிநாட்டு விவகாரமும் பாதுகாப்பும் தவிர்ந்த ஏனைய விடயங்களில் சட்டங்களை ஆக்கிக்கொள்ளும் அதிகாரம் இச்சபைக்கு வழங்கப்பட்டது.

### பிரதமரின் தலைமையிலான அமைச்சரவை

- ❖ பிரித்தானிய முடியின் பேரால் ஆளுநர் நாயகத்தால் மேற்கொள்ளப்பட வேண்டிய நிர்வாகக் கடமைகளை மேற்கொள்வதற்காக பிரதமரின் தலைமையிலான அமைச்சரவை நியமிக்கப்பட்டது.
- ❖ பாராளுமன்றத்தின் பெரும்பான்மை அங்கத்தவர்களின் ஆதரவைப் பெற்ற ஒருவர் ஆளுநர் நாயகத்தால் பிரதமராக நியமிக்கப்பட்டார்.
- ❖ இலங்கையின் முதலாவது பிரதமராக டி.எஸ்.சேனாநாயக்க அவர்கள் நியமனம் பெற்றார்.
- ❖ பிரதமரின் சிபாரிசின் பேரில் ஆளுநர் நாயகத்தால் ஏனைய அமைச்சர்கள் நியமனம் செய்யப்படுவர்.
- ❖ மேல்சபையில் இருந்து குறைந்த பட்சம் இருவராவது அமைச்சரவையில் இடம்பெற வேண்டும். அதில் ஒருவர் கட்டாயம் நீதி அமைச்சராக

நியமிக்கப்பட வேண்டும்.

❖ பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரம் ஆகிய அமைச்சுகள் பிரதமரால் வகிக்கப்பட வேண்டும்.

❖ அமைச்சர்களுக்கு அமைச்சுக்கள், அதிலடங்கும் பிரிவுகள் பிரதமரால் வழங்கப்பட வேண்டும்.

❖ தமது அமைச்சரவை தொடர்பாகத் தனிப்பட்ட முறையிலும், அரசாங்க செயற்பாடுகளில் கூட்டாகவும் செயற்படுவது அமைச்சரவையின் பொறுப் பாகும்.

❖ அமைச்சரவை பாராளுமன்றத்திற்குப் பொறுப்புக் கூறுதல் வேண்டும்.

சோல்பரி அரசியல் யாப்பின்படி இரு சபைகளைக் கொண்ட, ஆட்சி முறையும் அமைச்சரவையும் அறிமுகப்படுத்தப்பட்டமையால் பாராளுமன்ற ஆட்சிமுறை முழுமைத்துவமடைந்தது.

சோல்பரி யாப்பின் கீழ் முதலாவது பாராளுமன்றத் தேர்தல் 1947இல் நடைபெற்றது. டி.எஸ். சேனாநாயக்க அவர்கள் தலைமை வகித்த ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்றது. கட்சிகள் பெற்றுக் கொண்ட ஆசனங்களின் எண்ணிக்கை வருமாறு

| *கட்சி* | *ஆசனங்கள்* |
|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி | 42 |
| இலங்கை சமசமாஜக் கட்சி | 10 |
| தமிழ்க் காங்கிரஸ் | 07 |
| இலங்கை இந்திய காங்கிரஸ் | 06 |
| போல்ஷேவிக் லெனினிஸக் கட்சி | 05 |
| கம்யூனிஸ்ட் கட்சி | 03 |
| தொழிற் கட்சி | 01 |
| சுயேட்சைகள் | 21 |
| | **95** |

❖ டி.எஸ் சேனாநாயக்க அவர்களின் அமைச்சரவையில் 13 பேர் இடம் பெற்றிருந்தனர்.

❖ 1948ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆந் திகதி இலங்கை சுதந்திரம் பெற்றதுடன் சில மாற்றங்களுடன் இதே அரசியல் யாப்பு முறை செயற்படுத்தப்பட்டது.



**செயற்பாடு**

வகுப்பில் பத்து அமைச்சர் பதவிகளைக் கொண்ட அமைச்சரவையை அமைத்து, அமைச்சரவைக் கூட்டத்தை நடத்துங்கள். (ஆசிரியரின் ஆலோசனையுடன், மாணவர்கள் அனைவரும் பங்குபற்றத்தக்கவாறும் மாணவர்கள் அனைவருக்கும் அமைச்சர் பதவிகள் கிடைக்கத் தக்கவாறும் இரண்டு மூன்று கூட்டங்களை நடத்துங்கள்)

**சுருக்கம்**

- 1833 ஆம் ஆண்டு பாராளுமன்ற முறைக்கு வித்திடப்பட்டது.
- 20ஆம் நூற்றாண்டில் 1910ஆம், 1920ஆம், 1924ஆம் ஆண்டு கால அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தின் மூலமாக பாராளுமன்றம் பிரதிநிதித்துவ சபை ஒன்றாக மாற்றமடைவதற்கான முன்னெடுப்புகள் செயற்பட்டன.



1910 இல் வரையறுக்கப்பட்ட வாக்குரிமை அறிமுகப் படுத்தல்
1920இல் மாகாண தேர்தல் தொகுதி முறையின் அறிமுகம்
1924இல் மாகாண தேர்தல் முறைமை விரிவுபடுத் தப்படல்.

- 1931இல் டொனமூர் யாப்பின் கீழ் சர்வஜன வாக்குரிமை வழங்கப்படல். இனவாரிப் பிரதிநிதித்துவம் ஒழிக்கப்படல், நிர்வாகக் குழுமுறை அறிமுகமாதல் மூலம் இங்கிலாந்தின் பாராளுமன்ற முறையை நோக்கிய நகர்வு ஆரம்பமானது.
- 1946 சோல்பரி அரசியல் யாப்பின்படி பாராளுமன்ற ஆட்சி முறைமை முழுமையடைந்தது.
- 1948இல் சுதந்திரம் கிடைக்கும் சந்தர்ப்பத்தில் பரிபூரணமான பாராளுமன்ற ஆட்சிமுறையொன்று செயற்பட்டுக் கொண் டிருந்தது.
- 1948இல் பாராளுமன்ற முறையின் கீழ் சுதந்திரம் கிடைத்தது.
- சுதந்திரம் பெற்றதன் பின்னரான காலகட்டத்தை 4ஆம்